தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – பங்குனி 23
2010 ஏப்ரல் 6, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா.** ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"*

காதைக் குடையக்கூடிய கடுஞ்சொற்களையும் பொறுத்துக்கொள்கிற பண்பாளரின் அரசுக்குத்தான் மக்களிடம் மதிப்பு இருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

11—

மண் பரிசோதனை நிலையம்

***57305—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, பரமக்குடி மண் பரிசோதனை நிலையத்திற்குத் தண்ணீர் வசதி மற்றும் மராமத்துப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2008-2009 ஆம் ஆண்டு, பொதுப் பணித் துறையால் வேளாண்மைத் துறை கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.10.00 இலட்சம் பரமக்குடி மண் பரிசோதனை நிலையத்திற்குத் தண்ணீர் வசதி மற்றும் மராமத்துப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, ஆய்வகத்தில் பகுப்பாய்வுப் பணிக்குத் தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டு ஆய்வகப் பணிகள் தடையின்றி நடந்து வருகின்றன. மேலும், பொதுப் பணித் துறையால் கட்டட மராமத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: உங்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப் புகழ்வாய்ந்த இந்த மாமன்றத்திலே, நேற்று முதல் கேள்வி என்னுடைய அருமைத் தம்பி மாண்புமிகு சேகர் அவர்களுக்கும், இன்றைக்கு முதல் கேள்வி எனக்கும் வந்ததிலே பெருமையடைகிறேன். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்பவர்கள் அரசர்களாகவும், புலவர்களாகவும் தமிழகத்திலே வாழ்ந்ததற்குப் பிறகு, இன்றைக்கு அரசனாகவும், புலவராகவும் திகழ்கின்ற முத்தமிழ்க் காவலர், நம்முடைய அருமைக் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தச் சபைக்கு வந்துள்ளேன். இந்தச் சட்டமன்றமும், இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஒரு கம்பெனியாலேயே கட்டப்பட்டது என்பதையும் நீங்களெல்லாம் அறிவீர்கள். அது என் அண்ணனுடைய கம்பெனிதான். அதிலேயும், நான் பெருமையுற்றவனாக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைந்து, அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருந்து, அவர்கள் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய, பேரியக்கத்தினுடைய தலைவி எங்களுடைய அன்னை சோனியா அவர்களால் இது திறந்து வைக்கப்பட்டது என்பதை நினைத்துப் பெருமைகொள்கிற நிலையில். இன்றைக்கு முதல் கேள்வி எனக்கு வந்திருக்கிறது.

2010 ஏப்ரல் 6]

வறுமை நிறைந்த இராமநாதபுரம் பகுதியிலுள்ள பரமக்குடியிலே, ஏற்கெனவே விதைப் பண்ணை உண்டு. தண்ணீர் வசதி அங்கே சரியாக இல்லையே, அங்குத் தண்ணீர் வசதி செய்து தரப்படுமா என்று நான் கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் அளித்த அழகான பதிலுக்கு நன்றி. அதேபோல, வேறு தனிக் கேள்வி போடச் சொல்லாமல், அங்கே உள்ள விவசாயிகளுக்கு இதுவரை காப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன; அதையும் கவனித்து, அதற்கான வசதியையும் செய்ய, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு மாநில அரசு வழங்க வேண்டிய தொகை முழுவதும் வழங்கி, பிறகு மத்திய சர்க்கார் வழங்க வேண்டிய அந்தத் தொகையிலும், 75 சதவீதத்திற்கு மேல் வழங்கிவிட்டார்கள். அது எல்லாப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ.51 கோடி வர வேண்டியது இருக்கிறது. அந்தப் பணம் வந்ததும், இராமநாதபுரம் மாவட்டத்தில் விடுபட்டு இருக்குமானால், அதுவும் வழங்கப்பட்டுவிடும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே மண் ஆய்வு சம்பந்தமாகக் கேள்வியை கேட்டுவிட்டு, வேறு கேள்வி கேட்டதற்கும் விடை தரப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 9-35

கடந்த ஆண்டு 2008-2009 ஆம் ஆண்டு மண் ஆய்வுக்கூடம்மூலமாக 12,640 மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வுக்கூடம்மூலமாக 7,674 மண் மாதிரிகளும், மொத்தம் 20,314 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, இராமநாதபுரம் மாவட்டத்திலே விவசாயிகளுக்கு நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்து, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திலே விடுபட்டு இருப்பவர்களுக்கும் விரைவிலே கொடுக்கப்பட்டுவிடும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

12—

தேசிய சட்டக் கல்லூரி

***102981—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி துவக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி துவக்க மத்திய அரசிடம் வலியுறுத்துவதன் அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய சட்டக் கல்லூரிகள் துவக்க வலியுறுத்தும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பெங்களூரு, கொல்கத்தா, ஹைதராபாத் போன்ற நகரங்களில் எல்லாம், அந்தந்த மாநில அரசுகள் தேசிய கல்லூரிகளைத் துவக்கலாம் என்று ஒரு சட்டத்தை இயற்றி, அவை தன்னாட்சி பெற்ற அமைப்புகளாக, அரசியல் குறுக்கீடு இல்லாத ஒரு அதிகார அமைப்புகளாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுபோல் ஏன் தமிழ்நாட்டிலே கொண்டு வரக்கூடாது? அதைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.